**மே – 08**

# TNPSC துளிகள்

- சத்தீஸ்கர் மாநிலத்தின் பிஜப்பூரில் நடைபெற்ற அம்பேத்கர் ஜெயந்தி (ஏப்ரல் 14) விழா கொண்டாட்டத்தின் போது பழங்குடியினர் விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் இந்திய பழங்குடியினர் கூட்டுறவு சந்தையிடல் மேம்பாட்டுக் கூட்டமைப்பு ஆகியவற்றின் திட்டமான வன் தன் திட்டத்தை பிரதமர் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ் பிரதமர் பிஜப்பூரில் முதல் மாதிரி வன் தன் விகாஸ் கேந்திராவைத் தொடங்கி வைத்தார்.
- இந்தியாவின் மிகப் பெரிய அவுட்சோர்சிங் நிறுவனமான டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் 100 பில்லியன் டாலர் சந்தை மூலதனத்தை அடைந்துள்ளது. இதன் மூலம் 100 பில்லியன் டாலர் சந்தை மூலதனத்தை அடைந்த முதல் இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனம் என்ற வரலாற்றைப் படைத்துள்ளது.

# தேசியச் செய்திகள்

## ராஷ்டிரிய கிராம் ஸ்வராஜ் அபியான்

- நாட்டின் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளை பலப்படுத்தவும், அவற்றின் வெற்றிக்கு இடையூறாக இருக்கும் முக்கிய இடைவெளியை குறிப்பிட்டுக் காட்டுவதற்காகவும் பிரதமர் ராஷ்டிரிய கிராம் ஸ்வராஜ் அபியான் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்.
- இத்திட்டம் மத்தியப் பிரதேச மாநிலத்தின் மண்ட்லா மாவட்டத்திலுள்ள பழங்குடியினர் அதிகமாக வசிக்கும் இராம்நகர் மலைப்பகுதிகளில் தொடங்கப்பட்டது.
- மத்திய அரசுத் திட்டமான இத்திட்டம் ஊரக உள்ளாட்சி மன்றங்களை சுய நீட்டிப்புத்திறன் (Self–Sustainable), நிதியியல் ஆரோக்கியம் மற்றும் அதிகத் திறமையுடைய அமைப்பாக உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது.
- பஞ்சாயத்து அமைப்புகளின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புடைமைகளின் அதிகாரப் பகிர்வை ஊக்குவித்தல், கொள்திறன் (Capacity) மற்றும் செயல்திறன் (Effectiveness) ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் பஞ்சாயத்து அமைப்புகளின் செயல்பாடுகளுக்கு தடையாக இருக்கும் முக்கிய இடைவெளியை (Critical Gap) குறிப்பிட்டுக் காட்டுவதற்கு இத்திட்டம் முற்படுகிறது.

## கிராம் ஸ்வராஜ் அபியான்

- சிறப்புக் கவனம் தேவைப்படுகின்ற கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அதற்கு நலத்திட்டங்களை வழங்கும் திட்டமான (High Intensity outreach Programme) "கிராம் ஸ்வராஜ் அபியான் – சிறப்பு தலையீடுகள்" என்ற திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது. சப்கா சாத், சப்கா கவோன், சப்கா விகாஸ் எனும் பெயரில் Dr. பாபாசாகேப் அம்பேத்கர் ஜெயந்தி (ஏப்ரல் 14) விழாவின் போது இத்திட்டம் தொடங்கப்பட்டது.
- இத்திட்டம் 33 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களிலுள்ள 484

மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் வரும் அதிகபட்ச எண்ணிக்கையிலான கிராமங்கள் உத்திரப்பிரதேசம், அஸ்ஸாம், தமிழ்நாடு, பஞ்சாப் மற்றும் மேகாலயா ஆகிய மாநிலங்களில் அமைந்துள்ளன.

- ஒன்றிணைவு மற்றும் செறிவூட்டல் (Convergence and Saturation) கொள்கையின் அடிப்படையிலான அந்தியோதயா போன்ற ஊரக மேம்பாட்டுத் திட்டங்களின் வரிசையில் கிராம் ஸ்வராஜ் அபியான் தொடங்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் ஏப்ரல் 14 முதல் மே 5 வரையிலான மூன்று வார காலகட்டத்தில் தகுதியுடைய பயனாளிகளுக்கு மத்திய அரசின் ஏழு திட்டங்கள் 100% அளவில் சென்றடைவதை இத்தொடக்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதன் கீழ் வரும் ஏழு திட்டங்களாவன
  1. பிரதம மந்திரி உஜ்வாலா யோஜனா
  2. உஜாலா திட்டம்
  3. சவுபாக்யா திட்டம்
  4. பிரதம மந்திரி ஜன் தன் யோஜனா
  5. பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா
  6. பிரதம மந்திரி சுரக்ஸா பீமா யோஜனா
  7. இந்திர தனுஷ் திட்டம்
- சமூக ஒற்றுமையை ஊக்குவித்தல், வறுமையில் வாடும் ஊரக குடும்பங்களுக்குத் திட்டங்களின் பயன்கள் சென்றடைதல், செயல்பாட்டிலிருக்கும் திட்டங்களின் பின்னூட்டங்களைப் (Feedback) பெறுதல், புதிய தொடக்கங்களில் பதிவு செய்தல், விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கலில் கவனம் செலுத்துதல், வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்துதல், தூய்மை உள்ளிட்ட தேசிய முன்னுரிமைகளை மீண்டும் வலியுறுத்தல், மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளை பலப்படுத்துதல் ஆகியவற்றை இத்திட்டம் நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

## கோபர் தன் யோஜனா

- மத்திய குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை அமைச்சகம் கோபர் தன் (கோபர் – உயிரி வேளாண் கரிம வளங்களை செயலாற்றத் தூண்டல்; GOBAR - Galvanizing Organic Bio-Agro Resources) திட்டத்தை கர்னலிலுள்ள தேசிய பால் ஆராய்ச்சி நிறுவனத்தில் தொடங்கியுள்ளது.
- இத்திட்டம், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டுள்ளது.
- கோபர்தன் திட்டமானது, கிராமத் தூய்மையில் மாற்றத்தை ஏற்படுத்துதல் கால்நடைகள் மற்றும் கரிமக் கழிவுப் பொருட்களிலிருந்து பொருளாதாரம் (Wealth) மற்றும் ஆற்றலை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டது.
- இத்திட்டம், 2018-2019 காலகட்டத்தில், நாட்டின் பல்வேறு மாநிலங்களில் 700-உயிரி-வாயு நிலையங்களை (Bio – Gas units) செயலாக்கம் செய்வதற்கு உதவி புரிகிறது.

## யூரியா மானியத் திட்டம்

- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு, யூரியா மானியத்

திட்டத்தை 2017லிருந்து 2020 வரை தொடரும் உரத்துறையின் முன்மொழிவிற்கு அனுமதி வழங்கியதோடு உர மானியத் தொகையை வழங்குவதற்கு நேரடி பயன் பரிமாற்றத்தின் (Direct Benefit Transfer – DBT) செயலாக்கத்திற்கும் அனுமதி வழங்கியுள்ளது. மானியம் தொடர்பான இந்த முன்மொழிவு மத்திய இரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சகத்தின் உரங்கள் துறையினால் முன்னனுப்பப்பட்டது (Forwarded) குறிப்பிடத்தக்கது.

- இந்த முடிவு 2020 வரை யூரியா விலையில் எந்தவொரு அதிகரிப்பும் இருக்காது என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- யூரியா மானியத் திட்டத்தை தொடர்வது என்பது யூரியா உற்பத்தியாளர்களுக்கு மானியத்திற்கான தொகையை சரியான நேரத்தில் வழங்குதலை உறுதி செய்யும். இது சட்ட ரீதியாக கட்டுப்படுத்தப்பட்ட விலையில் (Statutory Controlled price) யூரியாவை சரியான நேரத்தில் விவசாயிகளுக்கு கிடைப்பதை உறுதி செய்யும். உரத்துறையில் நேரடி பயன் பரிமாற்றத்தின் செயலாக்கம் என்பது விவசாயமல்லா செயல்பாடுகளுக்கு மானிய விலையிலான யூரியாவின் பயன்பாட்டை குறைக்கும்.
- உரங்கள் துறையானது (Department of Fertilizers - DoF) நாடு முழுவதும் உரத் துறையில் (Fertiliser sector) நேரடி பயன் பரிமாற்றத்தினை செயல்படுத்தும் திட்டத்தில் இருக்கின்றது.
- DBT ஆனது, விவசாயிகளுக்கு மானிய விலையில் உரங்கள் வழங்கும் உர நிறுவனங்களுக்கு 100% மானியத்தை வழங்கும்.
- உரத்துறையில் DBTயின் செயலாக்கம் ஆனது மற்றபிற திட்டங்களுக்கு செயலாக்கம் செய்யப்பட்ட DBT யிலிருந்து, சற்று வேறுபட்டே காணப்படும்.
- இதன் கீழ் விற்பனையாளரால் பயனாளிகளுக்கு உரங்கள் விற்பனை செய்யப்பட்ட பின்னர் மானியமானது (பயனாளிகளுக்கு வழங்கப்படுவதற்குப் பதிலாக) உரநிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.
- யூரியா மானியம் ஆனது வரவு செலவு திட்டத்தின் ஆதரவுடன் (Budgetry Support) மத்திய அரசால் முழுவதும் நிதியளிக்கப்படும் மத்திய அரசுத் திட்டம் ஆகும். இந்த மானியத்தில் இறக்குமதி செய்யப்பட்ட யூரியாவிற்கான மானியமும் அடங்கும். இறக்குமதியை நோக்கிய இந்த மானியமானது மதிப்பிடப்பட்ட தேவை மற்றும் யூரியாவின் உள்நாட்டு உற்பத்தி ஆகியவற்றிற்கிடையேயான இடைவெளியின் பாலமாக செயல்படுகிறது. நாடு முழுவதும் யூரியாவின் போக்குவரத்திற்கான சரக்கு மானியமும் (Freight subsidy) இந்த மானியத்துடன் அடங்கும்.
- தற்போது, இந்தியாவில் 31 யூரியா உற்பத்திக் கூடங்கள் உள்ளன. இவற்றில் 28 யூரியா உற்பத்திக் கூடங்கள் இயற்கை எரிவாயுவை எரிபொருளாகக் கொள்கின்றன. மற்ற 3 யூரியா உற்பத்திக் கூடங்கள் நாப்தாவை (Naphtha) எரிபொருளாகக் கொள்கின்றன.

## அமேரிக்காவிலிருந்து LNG

- கச்சா எண்ணெய்யின் விலை உயர்வைத் தொடர்ந்து, இந்தியா அமெரிக்காவிடமிருந்து இயற்கை எரிவாயுவை இறக்குமதி செய்யத் தொடங்கியுள்ளது. 20 ஆண்டுகால ஒப்பந்தத்தின் கீழ் LNGயின் (Liquefied Natural Gas - LNG) முதல் வரவு (Shipment) லூசியானாவிலிருந்து தொடங்கியுள்ளது.
- MV மெரிடியன் ஸ்பிரிட் எனும் சார்ட்டர் கப்பல், 25 நாள் கடல் பயணத்திற்குப் பிறகு மஹாராஷ்டிராவின் தபோல் என்னும் இடத்திற்கு வந்தடைந்ததுள்ளது.

- இந்த மேம்பாடுடானது, அக்டோபர் 2017-ல் அமெரிக்காவிடமிருந்து கச்சா எண்ணெய்யை முதல் முறையாக இறக்குமதி செய்ததைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## ஊடாடும் ரோபோ உதவியாளர் (IRA) 2.0 – HDFC வங்கி


- HDFC வங்கி, மனிதப் பண்புகளுடைய ஊடாடும் செயல்பாடுடைய, ஊடாடும் ரோபோ உதவியாளரை (Interactive Robot Assistant – IRA) கர்நாடக மாநிலத்தின் பெங்களூருவில் அமைந்துள்ள தன்னுடைய கோரமங்கலம் கிளையில் தொடங்கியுள்ளது. இது (மனிதப்பண்புகளுடைய ஊடாடும் செயல்பாடுடைய ரோபோ) இவ்வங்கியின் கிளைக்கு வருகை புரியும் நுகர்வோர்களின் பயன்பாட்டாளர் அனுபவத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- மனிதப் பண்புகளுடைய IRA 1.0 ஐ அறிமுகப்படுத்திய இந்தியாவின் முதல் வங்கி HDFC வங்கியாகும். இவ்வங்கி, ஜனவரி 2018-ல் மும்பையிலுள்ள தன்னுடைய கமலா மில்ஸ் கிளையில் வாடிக்கையாளர் சேவைக்காக இந்த ரோபோவை அறிமுகப்படுத்தியது. நடப்பில் IRA 1.0 ஆனது கொச்சியின் பலரிவட்டோம் கிளையில் பயன்படுத்தப்படுகிறது. IRA1.0 என்பது GPS ஆல் இயங்கும் உட்புற மனிதப் பண்புகளுடைய ரோபோ ஆகும். இதற்கு வாடிக்கையாளர்கள் பேசுவதை புரிந்து கொள்ளக்கூடிய வகையில் பயிற்சியளிக்கப்படும். மேலும் இது பேச்சை புரிந்து கொள்ளும் தொகுதிகளையும் (Speech Recognising Modules) கொண்டுள்ளது.
- வங்கிக்கிளையின் உட்பகுதியில் நகர்ந்து செல்வதற்கு இது மீயொலி உணரிகளை (Sensors) பயன்படுத்துகிறது. வாடிக்கையாளர்களை புரிந்துகொள்வதற்காக (To recognise) இது முகத்தை கண்டறியும் வழிமுறையையும் (Algorithm) கொண்டுள்ளது.


## தளர்த்தப்பட்ட பணம் அனுப்பும் திட்டம்

- இந்திய ரிசர்வ் வங்கி தளர்த்தப்பட்ட பணம் அனுப்பும் திட்டத்திற்காக (Liberalised Remittance Scheme - LRS) அறிக்கையிடல் வரைமுறைகளை கடுமையாக்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒரு தனிநபர் ஆண்டிற்கு 2,50,000 அமெரிக்க டாலர் வரை மட்டுமே வெளிநாட்டிற்கு பணத்தை அனுப்ப முடியும். வரைமுறைகளை கடுமையாக்கியதின் நோக்கமானது கண்காணித்தலை மேம்படுத்துதல் மற்றும் தளர்த்தப்பட்ட பணம் அனுப்பும் திட்ட வரம்புகளின் இணக்கத்தை உறுதிப்படுத்துதல் ஆகியவை ஆகும்.
- தளர்த்தப்பட்ட பணம் அனுப்பும் திட்டம் ஆனது, நடப்பு மற்றும் மூலதன கணக்கு நோக்கங்களுக்காக / இரண்டு கணக்குகளும் சேர்ந்த நோக்கங்களுக்காக, சிறார்களை உள்ளடக்கிய (Minors) அனைத்து தனிநபர்களும் குறிப்பிட்ட தொகையை அமெரிக்க டாலர்களில் இலவசமாக அனுப்பலாம். 2004 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இந்திய ரிசர்வ் வங்கியால் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் வரைமுறைகளானது, 1999 ஆம் ஆண்டின் அந்நிய செலாவணி மேலாண்மை சட்டத்தின் (Foreign Exchange Management Act – FEMA) கீழ் ஏற்படுத்தப்படுகின்றன.

## அதிகபட்ச பணம் அனுப்புதல்

- 2017-ல் ஏறக்குறைய 69 பில்லியன் டாலர் பணம் செலுத்தல்களைப் (Remittances) பெற்று, சமீபத்திய உலக வங்கியின் இடம்பெயர்வு மற்றும் மேம்பாட்டு அறிக்கையின்படி பணம் செலுத்தல்களின் பெறுநர் வரிசையில் இந்தியா முதலிடத்தை தக்க வைத்துள்ளது.




SOURCE: WORLD BANK REPORT

# அறிவியல் மற்றும் தொழில்நுட்ப செய்திகள்

## டக்கோட்டா வானூர்தி

- ஹிண்டன் விமானப்படை தளத்தில் நடைபெற்ற இணைப்பு விழாவில் (induction Ceremony) புதுப்பிக்கப்பட்ட டக்கோட்டா வானூர்தியானது இந்திய விமானப் படையில்

இணைக்கப்பட்டது.

- சிறப்புமிக்க சேவை சாதனைக்குப் (Illustious Service Record) பிறகு விலக்கிக் கொள்ளப்பட்ட இந்த டக்கோட்டா DC – 3 VP 905 வானூர்தி விமானப்படையில் இணைக்கப்பட்டுள்ளது.
- புதுப்பிக்கப்பட்ட இந்த டக்கோட்டா வானூர்திக்கு பரசுராமா எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- மாநிலங்களவை உறுப்பினரான ராஜீவ் சந்திர சேகரிடமிருந்து நடப்பாண்டின் பிப்ரவரி மாதத்தில் டக்கோட்டா வானூர்தியை விமானப்படைத் தளபதி பெற்றுக் கொண்டார்.
- இந்திய விமானப் படையில் இணைக்கப்பட்ட முதல் மிகப்பெரிய போக்குவரத்து வானூர்தியான டக்கோட்டா, கூனி பறவை எனவும் பிரபலமாக அழைக்கப்படுகிறது.
- இந்த டக்கோட்டா வானூர்தி 1947 முதல் 1971 வரையிலான காலகட்டத்தில் விமான நடவடிக்கையில் முன்னணியில் இருந்தது. இவ்வானூர்தி 1947 ஆம் ஆண்டின் போரின் போது காஷ்மீர் நடவடிக்கைகளிலும் (Kashmir Operations) வங்கதேசப் போரிலும் முக்கியப் பங்கு வகித்தது.
- 1971 ஆம் ஆண்டிற்குப் பிறகு டக்கோட்டாவிற்குப் பதிலாக ஆவ்ரோ HS-748 (Avro HS-748) இந்திய விமானப்படையில் இணைக்கப்பட்டது.

- - - - - - - - - - - - - - -